தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**
www.tsch.org.au
info@tsch.org.au

**பேச்சுப்போட்டி 2022** **ஆண்டு மூன்று**

அனைவருக்கும் வணக்கம்

# பாரதியார்

பாரதியார் தமிழ் நாட்டிலுள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சின்னச்சாமிஐயர். தாயார் பெயர் இலக்குமி அம்மாள். பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் சுப்பிரமணியன். என்றாலும் சுப்பையா என்று அன்பாக அழைத்தனர்.

இவர் 11 வயதிலேயே புலமை மிக்கவராக விளங்கினார். அதனால் “பாரதி” என்று பட்டம் சூட்டப்பட்டார். பாரதியார் பல மொழிகளைக் கற்றிருந்தார். ஆனாலும் தமிழ்மொழியின் மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார்.

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்” எனக் கவி புனைந்தார்.
குழந்தைகளுக்காக

“ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா”

என்று பாடியுள்ளார்.

பாரதியாரின் கவிதைகள் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை யாவருக்கும் ஏற்றவையாகும்.

நன்றி
வணக்கம்